RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21439

OPEN ACCESS

# நகரத்தார் வழிபாட்டில் நற்றமிழ் முருகன்

சி. சிதம்பரம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்-624302, திண்டுக்கல், இந்தியா

# Nattamizh Murugan in the worship of Nagarathar

S. Chidambaram [a, *]

[a] Department of Tamil, School of Indian Languages & Rural Arts, Gandhigram Rurual Institute – (DTBU), Gandhigram - 624 302, India.

* Corresponding Author: mudalvaa@gmail.com

Received: 08-07-2021
Revised: 30-09-2021
Accepted: 06-10-2021
Published: 30-10-2021

**ABSTRACT**

The Nattukottai Nagarathars lived their lives according to the maxim "Thiraikadal odiyum thiraviyam thedu". They have been living in Sivaganga and Pudukottai districts for a long time. The great people who are doing good business in the Pandya country are referred to as 'Nagarathar' and 'Chettiar'. They are also known as Nattukottai Nagarathar, Dhanavanigar, Dhanavaisiyar, Magudadhana Vaishya, Nattarasan Kottai Chettiar, Gnanadesikar etc. Due to the large share of this community, today they have established and worshipped the Hindu God Muruga all over Asia. This article focuses on the background of the people who lived in Tamil Nadu and South East Asian countries by cooking temples for the Tamil God Muruga, carrying out various renovations and following unique cults in Murugan worship.

**Keywords:** Murugan worship, Nagarathar, Chettiar, Sivaganga

## முன்னுரை

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்ற பொன்மொழிக்கேற்ப தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஆவர். இவர்கள் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்கள் இணைந்த பகுதியில் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். பாண்டிய நாட்டில் வணிகத் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற பெருமக்கள் ‘நகரத்தார்’ என்றும், ‘செட்டியார்’ என்றும் குறிக்கப் பெறுகின்றனர். மேலும் இவர்கள் நாட்டுகோட்டை நகரத்தார், தனவணிகர், தனவைசியர், மகுடதன வைசியர், நாட்டரசன் கோட்டை செட்டியார், ஞானதேசிகர் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றனர். இந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பெருகி வாழ்கின்ற பகுதி, “செட்டிநாடு” என்று அழைக்கப்படுகிறது. புதுக்கோட்டை, பழைய பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் (சிவகங்கை) ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 96 ஊர்களை உள்ளடக்கிய பகுதியில் நகரத்தார் வாழ்கின்றனர். ஆனால் இன்று இவற்றுள் சில ஊர்கள் மறைந்து விட்டன. இச்சமூகத்தினரின் திருமண நிகழ்வுகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவர்கள் சமையல் கலையிலும் தங்களுக்கென்று ஒரு தனி இடம் பிடித்தவர்கள். நகரத்தார்களின் வீடுகளும் மிகப் பிரம்மாண்டமாக அமைந்திருக்கும். மன்னர்கள் இவர்களின் வீடுகளுக்கு கோபுரம் அமைத்து வீடுகட்டும் உரிமை வழங்கியிருப்பது இச்சமூகத்தினரின் தனிச் சிறப்பாகும்.

நகரத்தார்கள் வாணிபம் மட்டுமல்லாது, சைவ சமயத்தையும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்றவர்கள். இச்சமுதாயத்தினரின் பெரும்பங்கினால் இன்று ஆசியநாடுகள் முழுவதும் இந்துக் கடவுளான முருகனின் கோயில்களை நிறுவி வழிபட்டு வருகின்றனர். தமிழ்நாட்டிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் தமிழ்ப் பண்பாட்டை பரப்பும் வகையில் தமிழ்க் கடவுளான முருகனுக்கு கோயில்கள் சமைத்தும், பல்வேறுவிதமான திருப்பணிகளை செய்தும் முருக வழிபாட்டில் தனித்துவமான வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றியும் வாழ்ந்து வந்த பின்புலத்தை மையப்படுத்துகிறது இக்கட்டுரை.

## செட்டியும் முருகனும்

செட்டி என்பது நகரத்தாரைக் குறிக்கும் ஒரு சொல் என்பதை மணிமேகலையில் வரும் ஆதிரை பிச்சையிட்ட காதை உணர்த்துகிறது. ஆதிரையின் கணவனாகிய சாதுவனை, *"நன்று அறி செட்டி"* என்று சுட்டுகிறது (Duraisami Pillai & Vengatasaami Naattaar, 2019). நகரத்தார்கள் தங்கள் பெயருடன் செட்டி என்ற சொல்லைச் சேர்த்தே கையொப்பமிட்டு வந்தனர். தங்கள் திருமண நிகழ்ச்சிகளில் எழுதப்படும் இசைபிடிமானம். மொய்ப்பண ஏடு, சீராட்டுச் சக்கரம் முதலியவற்றில் இம்மரபு இன்றும் பேணப்படுகிறது. செட்டி என்னும் சொல் முருகப் பெருமானைக் குறிப்பதை சுந்தரர் தேவாரம் சுட்டுகிறது. சிவபெருமானை *"காதலாற் சுடர் சூர்தடிந்திட்ட செட்டியப்பனை"*[2] என்று சுந்தரர் அழைக்கிறார். அருணகிரியார் திருப்புகழிலும், தணிகை உலா, தணிகைப் புராணம் முதலிய நூல்களிலும் முருகப் பெருமான் செட்டி என்றே அழைக்கப்படுவதைக் காணமுடிகிறது. அகராதிகளும், நிகண்டுகளும் கூடச் செட்டி என்னும் சொல்லுக்கு *முருகப் பெருமான்*[3] என்னும் பொருளை உணர்த்துகின்றன. எனவே முருகப் பெருமான் பெயரையே நகரத்தார்கள் தம் மரபைக் குறிக்கவும் அழைத்தனர் எனத் தெரிகிறது.

## சமூகப் பின்புலம்

நகரத்தார்கள் வாழுகின்ற செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள ஊர்களில் இவர்கள் மட்டுமல்லாமல் பல்வேறு இனத்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். தாம் வாழ்ந்த ஊர்களில் கோட்டை போன்ற வீடுகட்டி வாழ்ந்ததால் 'நாட்டுக்கோட்டையார்' என்றும் அழைக்கப்பெற்றனர். செட்டிநாட்டுப் பகுதியின் எல்லையை, பாடுவார் முத்தப்பர்,

"வெள்ளாறது வடக்கு மேற்குப்பிரான் மலையாந்

தெள்ளார் புனல் வைகை தெற்காகும் - ஒள்ளிய நீர்

எட்டிக் கடற்கிழக்கா மிஃதன்றோ நாட்டரண்சேர்

செட்டிநாட் டெல்லையென செப்பு".

என்ற பாடலின் வழி வரையறை செய்கிறார். *"இந்த எல்லைகுள்ளேயே இம்மரபினர் வாழ்தல் வேண்டும் என்றும் எல்லை தாண்டிச் சென்றால் தீமை விளையும் என்றும் நம்பிக்கை இருந்தது. இது பெண்களுக்குரிய கட்டுப்பாடு என்பதே உண்மை"*[4] என்பார் தே. சொக்கலிங்கம். ஆனால் இன்று *"காலப்போகில் செட்டிநாட்டு ஊர்கள் புலம்பெயர்வு, நகர் மயமாதல், தொழில் காரணமாக 76 ஆகக் குறைந்துவிட்டதைக் காணமுடிகிறது."* (Annamalai, 1994)

பாண்டிய மன்னனால் 9 சிவன் கோயில்கள் நகரத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அக்கோயில்களின் அடிப்படையில் 9 பிரிவுகள் உருவாக்கப்பட்டன. நகரத்தார்களில் ஒரே கோவிலைச் சார்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் பங்காளிகள் என அழைத்துக் கொள்கிறார்கள். ஆகவே திருமண உறவுகள் ஒரே கோயிலைச் சார்ந்தவர்களுக்குள் கிடையாது. அவர்கள் கடற்கரையை விட்டு விலகி வாழ்ந்தாலும் திரைகடல் ஓடி திரவியம் தேடியவர்கள். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டைப் பரப்பியவர்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் பங்கு அளப்பெரிது. அந்நாடுகளிலிருந்து தாங்கள் வாழும் பகுதிக்கு எந்தெந்தப் பொருட்களையெல்லாம் கொண்டுவர முடியுமோ அவற்றைக் கொண்டுவந்து தங்கள் வாழ்வை வளப்படுத்தியும், கலைப்படுத்தியும் உள்ளனர். இலங்கை, பர்மா போன்ற நாடுகளில் காடுகளை அழித்து விளைநிலங்களாக மாற்றியபோது, அங்கு வெட்டியெடுத்தப் பல்வேறு விலை உயர்ந்த மரங்களை கடல்வழியாகச் செட்டிநாட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தனர். அந்த மரங்களைப் பயன்படுத்தத் தொடங்கிய நகரத்தார்கள் மரங்களில் பல்வேறு கலைப்பொருட்களையும் உருவாக்கத் தொடங்கினர். கலைப் பொருட்களை வெறும் கண்காட்சிப் பொருளாக மட்டும் இல்லாமல் வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற பொருட்களாக மாற்றினர். நகரத்தாரின் கலைப்பொருட்கள் அவர்களின் பண்பாட்டோடு தொடர்புடையன.

எந்தப் பொருளும் இவர்களின் கைத்திறமையால் உருவானதில்லை. இவையனைத்தும் கலைத்திறன் மிக்க தொழிலாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டவை. நகரத்தார்கள் இதற்காகப் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தச்சர்களை அழைத்துவந்து குடியமர்த்திய பெருமை உடையவர்கள். ஒரு இனம் மற்றொரு இனத்தையே வாழவைத்தது என்றால் அது செட்டிநாட்டுச் சமூகமே. பல்லவ மன்னர்கள் கற்களில் சிலை வடித்ததுபோல செட்டிநாட்டில் நகரத்தார்கள் கலைப்பொருட்களை உருவாக்கி மற்ற சமுதாயத்தார்க்கு முன்னோடியாகவும் எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்திருந்தனர் என்பதை வரலாற்று நோக்கிலும், பண்பாட்டு அடிப்படையிலும் சமூகப்பொருளாதார அடிப்படையிலும், எதிர்காலச் சந்ததியினருக்கு எந்தவித பாதிப்பினையும் ஏற்படுத்தாத வகையில் சூழலியல் அடிப்படையில் தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர் என்றால் அது மிகையாகாது. இறையனார் அகப்பொருள் உரைகளில் சிறந்த உரையாசிரியரைத் தேர்வு செய்த உப்பூரிக்குடிகிழார் மகன் உருத்திரன் சன்மனாரும், சங்க இலக்கியங்களில் இடம்பெறும், உப்பு, பொன்வணிகம் செய்த பல்வேறுவிதமான வணிக மரபினரும் இச்சமூகத்தினரே. சிலப்பதிகார காப்பிய தலைவனும் தலைவியும் ஆகிய கோவலனும் கண்ணகியும் நகரத்தார்களே. பட்டினத்து அடிகளும், 63 சிவனடியார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையாரும் ஒரு நகரத்தார் மரபை சேர்ந்தவரே. இவர் முதல் பெண் சிவனடியார் என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. சுதந்திரப் போராட்ட வீரர்கள், இலக்கியம், அரசியல், கல்வி, சட்டம், ஊடகவியல். திரைப்படத்துறை, ஆசிரியப் பெருமக்கள், கொடையாளர்கள், பயண இலக்கியவாதியினர், சட்டத்துறையினர் என அனைத்து துறைகளிலும் சிறப்பு வாய்ந்தவர்களாகத் திகழ்கின்றனர். மலேசியா, சிங்கப்பூர் என கடல் கடந்து வாணிபம் செய்யச் சென்றவர்களில் பெரும்பாலானோர் செட்டிமார்களே.. கடிதமோ கணக்கோ பிள்ளையார் சுழியைப் போட்டு, ‘சிவமயம்’ என்று எழுதுவது செட்டிநாட்டு மக்களின் வழக்கம். சிவனாருக்கு தரும் முக்கியத்துவத்துடன் முருகப்பெருமானையும் வணங்கி வந்தனர். தங்கள் வாரிசுகளுக்கு பழநியப்பன், அழகப்பன், வேலப்பன், முருகப்பன்,

செந்தில்நாதன், செந்திலப்பன், மெய்யப்பன், முருகம்மை, தெய்வானை, அழகம்மை, வள்ளியம்மாள், மெய்யம்மை என்றெல்லாம் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர்.

## நகரத்தார்களும், கோயில்களும்

நகரத்தார்கள் பிற சமுதாயத்தாருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்திருந்தனர். தங்கள் வருவாயில் மூன்றில் ஒரு பங்கினைக் கோயில்களுக்குச் செலவு செய்யும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருந்தனர். கோயில் பழுதா? கூப்பிடு செட்டியாரை! என்ற வழக்கம் புழக்கத்தில் இருந்தது. தமிழின் மிகப்பழமையான சிலப்பதிகாரம் வணிகத்தொழிலில் "*மேம்பட்ட வணிகக் கூட்டத்தை (மாநாய்கன்) சிறப்பித்துக் கூறுவதால் இதனை குடிமக்கள் காப்பியம்*"[6] என்றே தெ.பொ.மீ. குறிப்பிடுகிறார். நகரத்தார்களே முதன்முதலில் கோயில்களுக்குப் பாதயாத்திரையாக நடந்து செல்லும் வழக்கத்தை ஏற்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் பாத யாத்திரையாக நடந்து செல்லும்போதும், காவடி எடுத்துச் செல்லும்போதும் காவடிச்சிந்து, முருகன் துதி போன்ற பக்திப்பாடல்களைப் பாடி இறைவழிபாட்டிற்குரியவர்களாகத் திகழ்ந்தனர். அதுமட்டுமல்லாமல் பண்டைத்தமிழ் மன்னர்களைப்போல் குளம் வெட்டி நீரைச் சேமிக்கும் அறத்தையும் நகரத்தார் சமூகம் பின்பற்றியது. கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் திருக்குளங்களை வெட்டுதல், திருவிழாக் காலங்களில் இறைவன் திருவீதி உலா வருவதற்குப் பயன்படும் மரத்தினாலான வாகனங்களைச் செய்து வழங்குதல், திருக்கோயில்களில் மராமத்துப்பணிகளைச் செய்தல், திருக்கோயில்களுக்கு நடைப்பயணம் மேற்கொள்ளுதல், வணிகம் காரணமாக உலக நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளுதல், அவற்றை இலக்கியமாக மாற்றுதல் (பயண இலக்கியம்) போன்ற அரிய பணிகளை மேற்கொண்டுள்ளனர். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்பது சான்றோர் வாக்கு. கோயில் என்ற சொல் கோ + இல் எனப் பிரிந்து அரசன் வசிக்கும் இடத்தைக் குறித்தது. அரச மரபினர்கள் இறந்த பின்னர் அவர்களின் உடல் புதைக்கப்படும் இடத்தைப் *பள்ளிப்படைச்சந்தம்* என்று அழைத்தனர். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குப் பிறகு மக்கள் தாங்கள் வாழும் ஊரின் நடுவே இறைவன் உறையும் இடமாகக் கோயில்கள் மாறின. கோயில் சார்ந்த வளர்ச்சிகளில் பொதுமக்களின் பங்கு அதிகரிக்கத் தொடங்கின. கோயில்கள் சார்ந்த கலைகளும் வளரத்தொடங்கின. சமூகத்தின் ஒரு அங்கமாகவே இன்று கோயில்கள் மாறிவிட்டன. தமிழகக் கோயிற்கலை வரலாற்றில் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களாக நகரத்தார்கள் வழங்கிய சிறப்பினை இக்கட்டுரை மேலும் விளக்குகிறது.

## செட்டிக்கப்பலுக்குச் செந்தூரன் துணை

நகரத்தார்கள் பர்மா, ரங்கூன், செய்கோன், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு மரக்கலங்களில் சென்று வணிகம் செய்துவந்தனர். அங்கிருந்து பொன், நவரத்தின மணிகள், தேக்கு, அழகிய வேலைப்பாடுடைய கலைப்பொருட்கள், மங்குச்சாமான்கள், இன்னும் எத்தனையோ பொருட்களைக் கப்பல்கள் மூலமாகக் கொண்டுவந்தனர். மேலும் நகரத்தார்கள் கலன்களைப் பயன்படுத்தி வணிகம் செய்தபோது இவர்களது கப்பல்களை, விருப்ப தெய்வமான திருச்செந்தூர் முருகன் காத்துவந்ததால், செட்டிக்கப்பலுக்குச் செந்தூரன் துணை என்ற பழமொழியும் வழக்கத்தில் இருந்துள்ளது. எனினும் இந்த வழக்கில் உள்ள செந்தூரன் என்பது

மலேசியாவில் செந்தூல் பகுதியில் அமைந்த செந்தூல் முருகனைக் குறிக்கும் என்றும்”[7] கருதுகின்றனர். எனவே இந்த வழக்கத்தைச் செட்டிக் கப்பலுக்குச் செந்தூல் முருகன் துணை என்ற கூற்றும் இதனை உறுதி செய்கிறது. இந்த மக்களால் நாட்டுப் பொருளாதாரம் சிறந்தது மட்டுமன்றி இவர்கள் தொழில் கருதிச்சென்ற அயல் நாடுகளின் பொருளாதரத்தையும் பன்மடங்கு வளர்த்தவர்கள். சென்ற இடமெல்லாம் தங்களது விருப்ப தெய்வங்களுக்குக் (முருகன், அம்மன்) கோயில்களையும் திருப்பணிகளையும் மேற்கொண்டு, சிறப்பான முறையில், சமயத்தைப் பரப்பி, புராதனக் கலைச்செல்வத்தைப் போற்றித் தமிழகத்தின் பண்டையப் பெருமை, பண்பாடுகளை பாதுகாத்து கால மாறுதலுக்கேற்பத் புத்துணர்வுடனும், விழிப்புணர்வுடனும் தாமும் பொருந்திக்கொள்ளும் மனோபலம் மிக்கவர்ககளாகவும் விளங்கினர். தமிழகக் கோயிற்கலை வரலாற்றில் ஒவ்வொரு அரச மரபினருக்கும் ஒருவகைக் கலைபாணி இருப்பதுபோல் நகரத்தார்கள் தாங்கள் சமைத்த கோயில்களில் ஒருவித கலைபாணியை உருவாக்கிக்கொண்டனர். கோயிற்தூண்களில் பல்லவர்கள் தரங்கபோதிகை (அலை) அமைப்பது போன்று நகரத்தார்கள் கோயிற்தூண்களில் வாழைமரத்தின் குழை போன்ற அமைப்பினை ஏற்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பழநி பாத யாத்திரையும் நகரத்தாரும்

பாதயாத்திரை என்பது இந்துக்கள் விரதமுறையைக் கடைப்பிடித்து காலில் செருப்பு அணியாமல் நடந்தே தங்களின் விருப்ப தெய்வ கோவில்களுக்கு சென்று வழிபாடு மேற்கொள்ளும் முறையாகும். யாத்திரை என்ற சொல்லுக்கு திருத்தலப் பயணம் என்றும், பாத யாத்திரை என்பது நடந்தே திருத்தலப் பயணம் மேற்கொள்ளுதல் என்றும் ஆன்மீகத்தில் விளக்கம் தரப்படுகிறது. கோவில் திருவிழாக்கள், தைப்பூசம், மாசி மகம் உள்ளிட்ட பண்டிகை தினங்களின் போது பாத யாத்திரையானது மேற்கொள்ளப்படுகிறது. பழநி, திருச்செந்தூர், வைதீஸ்வரன், கோயில், வேளாங்கண்ணி, சபரிமலை உள்ளிட்ட திருத்தலங்களுக்கு மக்கள் பாத யாத்திரை செல்வதைக் காணமுடிகிறது. குளிர், வெயில், பனி என எல்லா காலநிலையிலும் விரதமுறையைப் பின்பற்றி கரடுமுரடான பாதையில் வெறும் காலில் நடந்து மன உறுதியோடு இறைவனை வேண்டி பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்கின்றனர். இந்நிகழ்வில் பெரும்பாலும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், பெரியவர்கள் என கூட்டம் கூட்டமாக மக்கள் நடந்து செல்கின்றனர். பாதயாத்திரையின் போது தெய்வங்களுக்கு ஏற்ப வேண்டுதல்களை நிறைவேற்ற இருமுடி, காவடி உள்ளிட்டவற்றை சுமந்து கொண்டு நடந்து சென்று வழிபாடு செய்கின்றனர். தெய்வங்கள் குறித்த பாடல்களைப் பாடியும் ஆடியும் கோசமிட்டும் உற்சாக மனதோடு இறை நினைப்பில் பயணம் செய்கின்றனர். பாதயாத்திரை மேற்கொண்டு வழிபாடு செய்வதால் குழந்தைப்பேறு, புதிய வேலை, பதவி உயர்வு, தொழில் வெற்றி ஆகியவை கிடைப்பதாகவும், நோய்கள், பிணிகள், தரித்திரம், கடன் தொல்லை போன்றவற்றை நீக்குவதாகவும் கருதப்படுகிறது. சங்க இலக்கிய நூலான திருமுருகாற்றுப்படையில் பாத யாத்திரை சென்று முருகனை வழிபடும் முறை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதிலிருந்து பாத யாத்திரை செல்லும் முறையானது சங்க காலம் முதலே வழக்கில் இருந்திருக்கிறது.

அருட்குமரனின் ஆறுபடை வீடுகளில் மூன்றாவது படைவீடு 'பழநியம்பதி' ஆகும். பழநி மலையில் எம்பெருமான் முருகன் ஞானமூர்த்தியாய் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறான். அடிவாரத்திலுள்ள திருஆவினன்குடியில் 'குழந்தை வேலனாய்' வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறான். பழநித் திருத்தலத்தில் பல சித்தர்கள் வாழ்ந்து முருகப்பெருமானை வழிபட்டு வந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. அதனால், பழநிக்கு 'சித்தன் வாழ்வு' என்ற பெயரும் உண்டு. சித்தர்களுக்கெல்லாம் நாதனாக விளங்கியதால், முருகனுக்கு 'சித்தநாதன்' என்ற பெயரும் உண்டு. செல்வங்களில் மேலான செல்வம் 'ஞானம்' ஆகும். ஞானம் நிறைந்திருக்குமிடத்தை செல்வமும், வீரமும், கல்வியும், இதர பல செல்வங்களும் தானே சென்றடையும். எனவேதான், ஞானமூர்த்தியாய், ஞான பண்டிதனாய், ஞான தண்டாயுதபாணியாய் முருகன் வீற்றிருக்கும் பழனிமலை தனிச்சிறப்பு வாய்ந்த தலமாக விளங்கி வருகிறது. தமிழகத்தில் அதிக பக்தர்கள் வழிபடும் தலமாகவும், தமிழகத்தில் அதிக காணிக்கை வரும் தலமாகவும் திகழ்கிறது. முருகனை வழிபடுவதற்கு எண்ணற்ற வழிபாட்டு முறைகள் இருந்த போதிலும், அவற்றில் பாதயாத்திரையாக சென்று முருகனை வழிபடும் முறையே மேலோங்கி இருந்து வருகிறது. முருகன் கோவிலுக்குப் பாத யாத்திரை சென்று வழிபடும் மரபு, இன்று நேற்று ஏற்பட்ட மரபு அல்ல. மிக மிக பழமையான மரபாகும்.

சுமார் 450 ஆண்டுகளுக்கு முன் இச்சமுதாயத்தைச் சேர்ந்த வணிகர் ஒருவர் உப்பு வியாபாரம் செய்து வந்தார். ஒரு கட்டத்தில் அவரது வாணிபம் நலிவடைந்தது. இதனால் பழநி முருகனிடம் தன் வாணிபம் பெருக செட்டியார் மனம் உருகி முறையிட்டார். வாணிபம் நல்லபடியாக நடக்கும் பட்சத்தில் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியை முருகனுக்கே அர்ப்பணிப்பதாக மனத்திலே பிரார்த்தனை செய்து கொண்டார். பழநி முருகன் அவருக்கு அருள் புரிந்தார். உப்பு வாணிபம் மேன்மேலும் வளரத் தொடங்கியது. செட்டியாரும் தான் வேண்டிக் கொண்டபடி முருகனுக்காக ஒதுக்கிய வருமான பங்கு பணத்தை ஆண்டு தோறும் தன் ஊரிலிருந்து பழநிக்குப் பாதயாத்திரையாகவே சென்று கொடுத்தார். முருகனின் கருணை வெள்ளத்தில் அழுந்திய அவர் அடுத்து வந்த ஆண்டுகளில் நோன்பிருந்து ஒரு குழுவாக நடைப்பயணம் வந்து ஆண்டு தோறும் வழிபாடு செய்யும் வழக்கத்தை மேற்கொண்டார். இதை அறிந்த மற்ற நகரத்தார்களும் ஆண்டு தோறும் தைப்பூசத் திருநாளில் முருகனை தரிசிப்பதகாக பல குழுக்களாகப் பாதயாத்திரை மேற்கொண்டு பழநி நோக்கி வந்தனர். இப்படித்தான் பழநி பாதயாத்திரை பிரபலமாகியது. ஒரு குழு பல குழுக்களாகி பல குழுக்கள் நூறாகி, நூறு ஆயிரங்களாகி இன்று இலட்சக்கணக்கான மக்கள் தைப்பூசத் திருநாள் விழாவிற்கு செட்டிநாட்டுப் பகுதிகளிலிருந்து பழநி வருகின்றனர்

*நேமங்கோயில் குமரப்பன் என்பவர் முதன்முதலில் பழநி முருகன் கோவிலுக்கு காவடிகட்டி பாதயாத்திரையாக வந்த செய்தியும், அதன் பின்னர் செட்டிநாட்டு நகரத்தார் பழநிக்கு காவடி எடுத்து பாதயாத்திரை வந்தது பற்றியும், பழநி அறபட்டயங்கள் கூறுகின்றன. தொடர்ந்து பழநி பாதயாத்திரை முறைப்படுத்தி சுமார் 350 வருடங்களாய் வளர்த்த பெருமை செட்டிநாட்டு நகரத்தாரையே சேரும். பழநி பாதயாத்திரை விரத முறைகளையும், காவடி கட்டி பாதயாத்திரை வரும் பயண முறைகளையும், தங்கி வரவேண்டிய இடங்கள் பற்றியும், காவடி பூசை வேல்பூசை ஊஞ்சல் பூசை ஆகியவற்றை செய்யவேண்டிய முறைபற்றியும், பாதயாத்திரையின்போது அன்னதானம் வழங்குவது பற்றியும் 'பழநி அறப்பட்டயங்கள்' மூலம் அறிய முடிகிறது. மேலைச்சிவபுரி நகரத்தார்,*

*கண்டனூர் அருளாடியார் ஆகியோர் பரம்பரை பரம்பரையாக வேல் பூஜை செய்து, காவடிகளையும், பாதயாத்திரையையும் வழிநடத்தும் வேலைச் சுமந்து நடை பயணம் மேற்கொள்கிறார்கள்*"[8] என்ற தகவல்களையும் பழநி செப்பேட்டு அறப்பட்டயங்கள் தெரிவிக்கின்றன. பழநிக்கு பாதயாத்திரையாக வரும் காவடியும், வேலும் பழநியில் செலுத்தப்பட்ட பின்பு மீண்டும் நடைபயணமாகவே குன்றக்குடியை அடைகின்றனர் என்ற செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மாறி வரும் கால சூழ்நிலையில் தங்களது பழக்கங்களை மாற்றாது தங்களது முன்னோர்கள் காட்டிய பாதையில் தங்களது பயணங்களை வைத்திருப்பது இவர்களின் தனிச்சிறப்பு. வசதிகள் இருந்தும் இல்லாததை போல் மேல் சட்டை அணியாமல் ஆண்டியாக கிடைத்த இடத்தில் சாப்பிட்டு சாலையோரங்களில் படுத்து தங்கள் பாரம்பரியத்தின் சிறப்பை இன்றளவும் கடைபிடித்து வருவது குறிப்பித்தக்கது. இந்த காவடி மற்றும் நடைப் பயணத்தின் போது பொதுமக்கள், பக்தர்கள் வரவேற்று பால், பழம், உணவு, குடிநீர் என பல்வேறு பொருட்களை வழங்கியும் வருகின்றனர். இச்செயலை இவர்கள் செய்வதன் நோக்கம் தங்களால் பாதயாத்திரை செல்ல இயலாத சூழலில் அவ்வாறு பாத யாத்திரை, காவடி எடுத்துச் செல்பவர்களுக்கு இதுபோன்ற புண்ணிய காரியங்களில் ஈடுபட்டு தங்களுடைய நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

## காவடி வழிபாடும், வேல் பூசையும்

முருகப் பெருமானுக்குரிய முக்கிய விழாக்களுள் தைப்பூசமும், கந்தர் சஷ்டியும், குறிப்பிடத்தக்க விழாக்களாகும். தைப்பூசத்தின்போது காவடி எடுத்து முருகப் பெருமானுக்குக் காணிக்கை செலுத்துவது நகரத்தார் வழக்கம். தமிழகத்தில் குன்றக்குடிக்கும், பழநிக்கும், தத்தம் ஊர்களிலிருந்து காவடி எடுத்துக் கால்நடையாகச் செல்வர். தைப்பூசத்தை மலேயா, சிங்கப்பூர், பர்மா, வியாட்நாம் முதலிய வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று கொண்டாடச் செய்த பெருமை நகரத்தார்களையே சாரும். சிங்கப்பூர், பினாங்கு, இரங்கூன், செய்கோன் முதலிய இடங்களில் தைப்பூச விழா கொண்டாடப்படுகிறது. வட இந்தியாவில் பம்பாய்க்கு அருகில் நாசிக்கிலும் நகரத்தார்கள் தைப்பூசத்தைச் சிறப்பாகக் காவடி எடுத்துக் கொண்டாடுகின்றனர். நகரத்தார் ஆடவர், மகளிர் பலர் கந்தர் சஷ்டி விரதம் மேற்கொண்டு பல ஆண்டுகள் தொடர்ந்து விரதம் இருப்பர். திருச்செந்தூர் சென்று நிறைவேற்றுவர். தேவகோட்டையில் கந்தர் சஷ்டி விழா மிகச் சிறப்பாகப் பல ஆண்டுகளாகக் கொண்டாடப்படுகிறது.

பால் காவடி, பன்னீர் காவடி, சந்தனக்காவடி, புஷ்பக்காவடி, சர்க்கரைக் காவடி எனக் காவடிகளில் பல வகைகள் உண்டு. ஒருகாலத்தில், பலாமரத்தில் இருந்து காவடிகளை செய்வது வழக்கமாக இருந்தது. இது பால் சத்துள்ள மரம். இப்போது பலா மரங்கள் இந்தப் பகுதியில் கிடைப்பதில்லை. அதனால், தேக்கு மரங்கள் பயன்படுகிறது. மரத்தைக் கொண்டு காவடி செய்யும்போது, அந்தக் காவடிகளில் பிள்ளையார், முருகன், வேல், மயில் உருவங்கள் இடம்பெற்றிருக்கும். இக்காவடிகளுக்கு வழிநெடுக, பூசைகள் செய்யப்படுகின்றன. பஜனைகளும் பாடல்களும் பாடப்படுகின்றன. நிறைவாக அன்னதானமும் சிறப்பாக நடைபெறும். பழநிக்கு வரும் காவடிகளில் பாரம்பரியமிக்கது நகரத்தார்களது காவடிகளே. இதனைத் தொடர்ந்து வல்லம்பர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் நாட்டார் காவடிகள் என்ற பெயரில் தொடர்ந்து காவடி எடுத்து, வேல் பூசை செய்து தங்களின் நேர்த்திக் கடன்களைச் செலுத்தி வழிபாடு செய்து வருகின்றனர்.

எடப்பாடியில் இருந்து வரும் காவடிகளும் புகழ்பெற்ற காவடிகளாகத் திகழ்கின்றது. காவடிகளை எடுத்து வரும் போது அவர்களுக்குப் பாதுகாப்பாக, சாலைப் பாதுகப்புக் குழு, மருத்துவக் குழு என பல்வேறு குழுக்களும் பின்தொடர்ந்து வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பாத யாத்திரையின்போது கால்களில் ஏற்படும் காயங்களுக்கு மருந்தாக மருத்துவக்குழுக்கள் பயன்படுத்தப்படும் முக்கிமான மருந்து திருநீரே ஆகும்.. இந்த திருநீற்றுக்கு நோய்களைப் போக்கும் அரிய சக்தி உள்ளதாக இலக்கியங்கள் பகர்கின்றன. தமிழ்நாட்டைத் தொடர்ந்து இலங்கையிலும் கதிர்காமன் என்று அழைக்கப்படுகின்ற முருகப்பெருமானுக்கு நடைப்பயணம் மேற்கொள்ளும் வழக்கம் நடைமுறையில் உள்ளது உற்றுநோக்கத்தக்கது.

“வேல் என்பது முருகப்பெருமான் கையில் உள்ள ஆயுதம். வெற்றி தருவது வேல். அது வீர வேல். தாரை வேல், விண்ணோர் சிறை மீட்ட தீர வேல், செவ்வேல், திருக்கை வேல், வாரி குளித்த வேல், சூர் மார்பும் குன்றும் துளைத்த வேல் அது ஞானத்தின் அடையாளம்”[9] என்று வேலின் தத்துவத்தை கிருபானந்த வாரியார் கந்தபுராணச் சொறிபொழிவில் குறிப்பிடுகிறார். வேலை முருகப் பெருமானாகக் கருதி வழிபட்டவர்கள் நகரத்தார்கள். வேலை வணங்குவதே எமக்கு வேலை என்று கருதியவர்கள். நகரத்தார்கள் வணிகம் செய்யச் சென்ற இடங்களுக்கு எல்லாம் வேலை உடன் எடுத்துச் சென்று வழிபட்டு வந்தனர். தங்கள் வாணிபம் செய்யும் இடங்களில் வைத்துக் கோயில், வீடு கண்டனர். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தாங்கள் வாழும் ஊர்களிலும் வேலுக்குப் பூசையிட்டு அன்னதானம் செய்வதை மரபாகவும், வழக்கமாகவும் கொண்டுள்ளனர். வேலுக்குப் பூசையிடும் வேள்வணிகர் என்று இவர்களுக்குப் பெயருண்டு. திரைகடலோடித் திரவியம் தேட முற்பட்டபோது நாகப்பட்டினத்திலும் அதனை ஒட்டி, எட்டுக்குடியிலும், சென்னையிலும், திருவொற்றியூரிலும் வேல்பூசை நடத்தினர். நகரத்தார் ஊர்களில் பெரும்பாலான இடங்களில் வேல்பூசை நடைபெறுகிறது. தேவகோட்டையில் மாசிமகத்தன்று சிறப்பாக வேல்பூசை நடத்துகின்றனர். வெளிநாடுகளிலும் வேல்பூசை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அங்கு வேல் தான் முதலில் இருந்து, பின்பு படிப்படியாக திருவுருவம் அமைத்துக் கோயில் கட்டத் தொடங்கினர். சென்னையில் ஆறுபடை வீட்டிற்குக் கோயில் எழுப்பவும் நகரத்தார்கள் உதவியுள்ளனர். மாசிமகத்தன்று சென்னை பவளக்காரத் தெருவில் இருந்து திருவொற்றியூருக்கு இரதத்தில் முருகன் செல்வார். நகரக் கோயிலில் ஒன்றான வேலங்குடி என்பதன் பெயர் வேலனுக்குரிய குடி என்பதன் விளக்கமாக இருக்கவேண்டும்.

## இதர கோயிற் திருப்பணிகள்

திருஆவினன்குடிக் கோவில் என்பது பழநியின் ஆதிக் கோவிலாகும். சங்ககாலப் புலவரான நக்கீரர் தமது ‘திருமுருகாற்றுப்படை’யில் முருகனின் மூன்றாவது படை வீடாகத் திருஆவினன்குடியைப் போற்றியுள்ளார். இக்கோவிலில் முருகப்பெருமான் மயில்மீது அமர்ந்து குழந்தை வேலாயுத சுவாமி என்ற பெயருடன் விளங்குகிறார். திரு ஆவினன்குடி முருகனைத் தரிசித்து நன்மை பெற தேவர்களும் முனிவர்களும் வருவதாகத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் குறிப்பிடுகிறார். மிக பழமைமிக்க இக்கோவிலை கி.பி.1898 - இல் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் புதுப்பித்துக் கட்டினர். இக்கோவிலின் கோபுரம் கி.பி. 1968- இல் நாட்டுக் கோட்டை நகரத்தார்களால்

அமைக்கப்பட்டு, குடமுழுக்கு விழா நடைபெற்றது. செட்டுநாட்டுப் பகுதியில் மட்டுமல்லாது, வட இந்தியாவில் நாசிக், காசி, கொல்கத்தா முதலிய இடங்களில் நகர விடுதிகளையும், மடங்களையும் ஏற்படுத்தி அறப்பணிகளையும் மேற்கொண்டுள்ளனர். தமிழ்நாடு, இந்தியா, மட்டுமல்லாது, தென்கிழக்கு ஆசிய நாடுகளான இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் பிணாங்கு, பர்மா வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா ஆகியநாடுகளிலும், அமெரிக்கா, இலண்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளிலும் சிறப்பாக வணிகம் மேற்கொண்டதுடன் திருக்கோயில்களையும், திருவிழாக்களையும் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். *"இலங்கையில் உள்ள பழைய, புதிய கதிகாம வேலாயுத சுவாமி திருக்கோயில்கள், சிங்கப்பூரில் உள்ள தண்டாயுதபாணி கோயில், பர்மா கம்பையில் உள்ள முருகன் கோயில், பினாங்கில் (மலேசியாவில்) தண்டாயுதபாணி முருகன் கோயில், தண்ணீர்மலை கோயில், கோலாலம்பூர் தண்டாயுதபாணி திருக்கோயில், கோலாலம்பூர் செந்தூல் தண்டாயுதபாணி கோயில் உள்ளிட்ட பதினைந்து கோயில்கள், மலாக்கா சுப்பிரமணியர் திருக்கோயில், தெற்கு வியட்நாம் செய்கோனில் தண்டாயுதபாணி திருக்கோயில், இந்தோனேசியாவில் உள்ள தண்டாயுதபாணி திருக்கோயில் முதலிய கோயிகல்களோடு, இலண்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் கால்பதித்த நகரத்தார்கள் முருகன், சிவன், அம்மன் கோயில்களையும் நிறுவி, முருகனுக்குரிய திருவிழாக்களையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடிவருகின்றனர்"*[10] என்பதும் குறிப்பிடத்தக்கது

## இதரப்பணிகள் - மடங்கள்

சைவம் தழைக்கப் பாடுபட்ட செயற்கரிய செயல்கள் செய்த அறுபத்து மூன்று நாயன்மார்கள் மீதும், குறிப்பாக சைவசமயக் குரவர் நால்வர்மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்ட நகரத்தார்கள் அவர்களைத் தங்கள் குருவாக ஏற்றுக் கொண்டனர். அவர்களைப் போற்றி வழிபடும் முகமாகவும், அவர்களால் பாடப்பட்ட திருமுறைகளை வளர்க்கும் முகமாகவும் அறுபத்து மூவர் மடங்களையும், குருபூசை மடங்களையும் ஆங்காங்கு நிறுவினர். அம்மடங்களில் நாயன்மார் திருமேனிகளை எழுந்தருளிவித்தனர். நாயன்மார்கள் பிறந்த நட்சத்திரத்தன்று, அபிடேக ஆராதனைகள் செய்து வணங்கினர்.

திருப்பெருந்துறை, காரைக்குடி, பலவான்குடி ஆகிய ஊரிகளில் திருவாசக மடங்களை நகரத்தார்கள் நிறுவினர். திருப்பெருந்துறைத் திருவாசக மடத்தில் ஏழைஎளிய மாணவர்களுக்கு தேவார திருவாசகங்களை இசையுடன் பயிற்றுவித்தனர். பலவான்குடியில் 'சிவநேசன்' என்ற பெயரில் அச்சியந்திரசாலை ஒன்றை ஏற்படுத்தி 'சிவநேசன்' என்ற இதழை வெளியிட்டனர். அந்த இதழ் சைவசமயம் தொடர்பான செய்திகளைத் தாங்கி வந்தது. திருமந்திரத்தின் பெயரால் 'திருமந்திர மடம்' ஒன்றைக் காளையார் கோயிலில் ஏற்படுத்தி திருமூலர் திருநாளன்று சிறப்பு வழிபாடுகள் செய்யவும், திருமந்திரம் பாராயணம் செய்யவும் வழிவகைகள் செய்தனர். காசி, கொல்கத்தா, நாசிக் போன்ற வட இந்தியத் தலங்களிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் நகரத்தாரின் சைவசமயப் பணி குறிப்பிடத்தக்கது,

## முடிவுரை

பாரம்பரியமிக்க வணிகக்குடியில் பிறந்து, மன்னர்களுக்கு இணையாக கோட்டை போன்ற வீடுகளையும், கொடிகளையும் பயன்படுத்தும் உரிமை உடைய நகரத்தார் சமூகத்தினர் திரைகடல் ஓடித் திரவியம் தேடி, தங்கள் வாழ்வையும் வளத்தையும் பெருக்கிக்கொண்டதோடு பிற சமூகத்தினரையும் வாழ்வித்து கொடுத்து, சமூக நல்லினக்கத்திற்கும் சமூக ஒற்றுமைக்கும் பாலமாக இருந்து சைவ சமயத்தின் தூண்களாகவும், முத்தமிழ்க் கடவுளான முருகனின் சீடர்களாகவும் திகழ்ந்து வருகின்றனர் என்றால் அது மிகையாகாது.

## References

Annamalai, P (1994) Nagarathar Panpadum Palakavalakangalum, Paari Nilayam, Chennai, India

Duraisami Pillai, A., Vengatasaami Naattaar, N.M. (2019) Manimegalai (Moolamum Uraiyum, Gowra Publications, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License